1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பேர் அடுத்த துறையிலிருந்து டெபுடேஷனில் வந்தவர்களாக இருக்கிறார்கள். 40 சதவிகிதத்தினரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டிருகின்றன என்றாலும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் இந்தத் துறையே நிரந்தரமாக இல்லாமல் இருந்ததால் இதுவரையிலே நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யப்படவில்லை என்றாலும் ஒரு ஆண்டு முடிந்த பிறகு மற்ற அலுவலர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அது அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, இந்தச் சர்க்கார் இந்தத் துறையை நிரந்தரமாகப் பண்ணினாலும், பண்ணாவிட்டாலும் இந்த ஊழியர்கள் பல ஆண்டுகள் வேலை செய்ததால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு குறிப்பு தயார் செய்து மேலே அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அவர்களுக்குச் சாதகமாகும் என்று கருதுகிறோம்.

Soap Factories

* 77 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to establish a Soap Factory in every development block ; and

(*b*) if so, the present stage of the proposal?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை. தற்போது இம்மாநிலத்தில் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் 29 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் மட்டுமின்றி, மேலும் நான்கு சோப்புத் தயாரிப்புத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் 50 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இந்தக் கூடுதல் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் நிதி உதவியைப் பெறுவதற்காக இது குறித்த திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் இசைவு இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், கதர்–கிராமக் கைத்தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சோப் பேக்டரிகள் எல்லாமே வாஷிங் சோப்பிற்காக மட்டும்தானா அல்லது பேத்திங் சோப்பிற்கும் திட்டம் இருக்கிறதா? இன்னும்

பெரிய அளவிலே சோப்புத் தொழிற்சாலையை உற்பத்தி செய்ய மத்திய அரசிடம் திட்டம் கொடுத்திருக்கிறீர்கள், அது எந்த சோப்பிற்கான திட்டம்? கிராமக் கைத்தொழில் அடிப்படையிலா அல்லது பெரிய தொழிற்சாலை அடிப்படையிலா?

மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 29 சோப்பு தயாரிப்புத் தொழிற்சாலைகள் இதுவரையில் இருக்கின்றன. அதிலே இப்பொழுது 3 புதிதாகத் திட்டமிட்டு துவங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. இன்னும் 50 சோப் கம்பெனிகள் புதிதாக ஏற்படுத்துவதற்குத் திட்டமாகத் தான் இந்திய சர்க்காரிடம் அனுமதி கேட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளெல்லாம் நடைமுறையிலே அதற்கு எந்தெந்த அளவிலே இப்பொழுதிருக்கும் அதே தொழிற்சாலையிலேயே 'எக்ஸ்டெண்ட்' பண்ணுவதா? அல்லது புதிதாக வேறிடத்தில் ஆரம்பிப்பதா? எதிலே லாபம் இருக்கும் என்று ஆராய்ச்சி செய்யப்படுகிறது. மேலும் 50 தொழிற்சாலைகளை ஏற்படுத்தி தனியாக வைப்பதா அல்லது இருக்கின்ற ஒர்க்ஷாப்புகளையே விரிவுபடுத்துவதா என்ற திட்டம் பொருளாதாரத் துறையிலே நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இந்த 29-ம், புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் 3-ம் துணி துவைக்கின்ற சோப்புக்கு. ஒரேயொரு சோப்பு கம்பெனி, வாசனை சோப்பு கம்பெனி ஒன்று, நம்முடைய வாசனை சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை செங்கல்பட்டு மாவட்டத்திலே பூண்டியிலே நிறுவப்பட்டிருக்கிறது.

நெய்வேலி அனல் மின் நிலையம்

*78 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நெய்வேலியில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி இரண்டாவது அனல் மின்சக்தி நிலையத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், இதன் இறுதி உற்பத்தித் திறன் 1000 மெகாவாட் ஆக இருக்கலாமென்றும், ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஐந்து நிலையங்கள் நிறுவப்படலாமென்றும் அவற்றில் ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட இரண்டு நிலையங்கள் முதற்கண் நிறுவப்படலாமென்றும், ஒவ்வொன்றும் 200 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட எஞ்சிய மூன்று நிலையங்களும் படிப்படியாக நிறுவப்படலாமென்றும் இம்மாநில அரசு 1972 ஜூன் திங்களில் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.